

உ

# பஜனைப் புத்தகம்

## கனடா நகரத்தார் சங்கம்

## பக்கக் குறிப்பு

| பாடல் | பக்க எண் |
|---|---|
| கணேச சரணம் சரணம் கணேசா | 1 |
| பிள்ளையார் பிள்ளையார் பெருமைவாய்ந்த பிள்ளையார் | 2 |
| கைத்தல நிறைகனி | 3 |
| பிரபோ கணபதே | 4 |
| கௌரி நந்தன கஜானனா | 4 |
| அன்பருக்கு அன்பனே நீ | 5 |
| ஆடுக ஊஞ்சல் ஆடுகவே | 5 |
| முத்தைத்தரு | 7 |
| வள்ளலார் பாட்டு | 7 |
| சுட்டதிரு நீறு எடுத்து | 8 |
| பச்சை மயில் வாகனனே | 9 |
| விறல் மாறன் ஐந்து | 9 |
| வேலாட மயிலாட | 10 |
| கொண்டாடு கொண்டாடு | 11 |
| தேவி கருமாரியம்மன் ஸ்தோத்திரம் | 12 |
| மஹாலக்ஷ்மி அஷ்டகம் | 14 |
| துக்க நிவாரண அஷ்டகம் | 15 |
| கங்க ஜடாதர | 16 |
| லிங்காஷ்டகம் | 16 |
| சம்போ மகாதேவா சதாசிவா | 17 |
| ஸ்ரீநிவாசா கோவிந்தா | 17 |
| ராம நாம தாரகம் | 18 |
| ஹரிவராசனம் விஸ்வமோகனம் | 18 |
| ஆஞ்சநேய வீரா | 19 |
| கல்லாப்பிழையும் | 19 |
| நவகிரக பாடல்கள் | 20 |
| நாத விந்துக லாதீ நமோநம | 21 |
| ஓம் மங்களம் ஓம்கார மங்களம் | 21 |

**உ**

## கணேச சரணம் சரணம் கணேசா

கணேச சரணம் சரணம் கணேசா, கணேச சரணம் சரணம் கணேசா
கணேச சரணம் சரணம் கணேசா, கணேச சரணம் சரணம் கணேசா

வாகீச சரணம் சரணம் வாகீசா, வாகீச சரணம் சரணம் வாகீசா
வாகீச சரணம் சரணம் வாகீசா, வாகீச சரணம் சரணம் வாகீசா

சாரீச சரணம் சரணம் சாரீசா, சாரீச சரணம் சரணம் சாரீசா
சாரீச சரணம் சரணம் சாரீசா, சாரீச சரணம் சரணம் சாரீசா

கணேச சரணம் சரணம் கணேசா, கணேச சரணம் சரணம் கணேசா
கணேச சரணம் சரணம் கணேசா,
சரணம் கணேசா, சரணம் கணேசா, சரணம் கணேசா

## ஐந்து கரத்தனை யானை முகத்தனை

ஐந்து கரத்தனை யானை முகத்தனை,
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன் தனை ஞானக் கொழுந்தினை
உந்தியில் வைற்றடி போற்றி நின்றேனே!

## பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும்

பாலும் தெளிதேனும், பாகும் பருப்பும் இவை நான்கும், கலந்து உனக்கு
நான் தருவேன் கோலம் செய் துங்கக் கரிமுகத்து தூமணியே
நீ எனக்கு சங்க தமிழ் மூன்றும் தா!

## வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்,
மாமலராள் நோக்குண்டாம்
மேனி நுடங்காது பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு!

## பிள்ளையார் பிள்ளையார் பெருமைவாய்ந்த பிள்ளையார்

பிள்ளையார் பிள்ளையார் பெருமைவாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமைவாய்ந்த பிள்ளையார்

ஆற்றங்கரை ஓரத்திலே அரச மரத்து நிழலிலே,
வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார்

ஆறுமுக வேலவனின் அண்ணனான பிள்ளையார்
நேரும் துன்பம் யாவையும் தீர்த்து வைக்கும் பிள்ளையார்

மஞ்சளிலே செய்யினும் மண்ணினாலே செய்யினும்
ஐந்தெழுத்து மந்திரத்தை நெஞ்சில் காட்டும் பிள்ளையார்

அவல் பொரி கடலையும் அரிசி கொழுக்கட்டையும்
கவலையின்றி உண்ணுவார் கண்ணை மூடி தூங்குவார்

கலியுகத்தின் விந்தைகளை காணவேண்டி அனுதினம்,
எலியின் மீது ஏறியே இஷ்டம் போல சுற்றுவார்

பிள்ளையார் பிள்ளையார் பெருமைவாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமைவாய்ந்த பிள்ளையார்!

## கணேச பஞ்சரத்னம்

முதாகராத மோதகம் சதாவிமுக்தி சாதகம்,
கலாதராவ தம்சகம் விலாசிலோக ரக்ஷகம்

அனாய கைக நாயகம் வினாசிதேப தைத்யகம்,
நடாசுபாசு நாஷகம் நமாமிதம் விநாயகம்

நடேதராதி பீகரம் நவோதிதார்க்க பாஸ்வரம்,
நமத் சுராரி நிர்ஜனம் நடாதி காப துத்தரம்

சுரேஷ்வரம் நிதீஷ்வரம் கஜேஷ்வரம் கணேஷ்வரம்
மகேஷ்வரம் சமாஷ்ரையே பராத்பரம் நிரந்தரம்.

சமஸ்த லோக சம்கரம் நிரஸ்த தைத்ய குஞ்சரம்,
தரேதரோ தரம்வரம் வரேபவக்ற மக்ஷரம்

க்ருபாகரம் க்ஷமாகரம் முதாகரம் யசாஸ்கரம்,
மனஸ்கரம் நமஸ்க்ருதம் நமஸ்கரோமி பாஸ்வரம்

அகிம்ச்சனார்த்தி மர்ஜனம் சிரந்தனோக்தி பாஜனம்,
புராரி பூர்வ நந்தனம் சுராரி கர்வ சர்வணம்

பிரபஞ்ச நாஷ பீஷணம் தனஞ்சயாதி பூஷணம்,
கபோல தான வாரணம் பஜே புராண வாரணம்

நிதாந்திகாந்த தந்தகாந்தி மந்தகாந்த காத்மஜம்
அசிந்த்ய ரூப மந்தஹீன மந்தராய க்ரிந்தனம்

ஹ்ருதந்தரே நிரந்தரம் வசந்தமேவ யோகினம்,
தமேக தந்த மேவதம் விசிந்தயாமி சந்ததம்

மகாகணேச பஞ்சரத்னம் ஆதரெனெ யோன்வஹம்,
பிரஜாபதி ப்ரபாதகே ஹ்ருதிஸ்மரன் கணேஷ்வரம்

அரோகதாம் அதோஷதாம் சுசாஹிதிம் சுபுத்ரதாம்,
சமாஹிதாயு ரஸ்த பூதிம் அப்யுபைதி சோசிராத்.

## <u>கைத்தல நிறைகனி</u>

கைத்தல நிறைகனி யப்பமொ டவல் பொரி கப்பிய கரிமுக--- னடிபேணிக்

கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ கற்பக மெனவினை---- கடிதேகும்

மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன் மற்பொரு திரள்புய---- மதயானை

மத்தள வயிரனை உத்தமி புதல்வனை மட்டவிழ் மலர்கொடு--- பணிவேனே

முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில் முற்பட எழுதிய---- முதல்வோனே

முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம் அச்சது பொடிசெய்த---- அதிதீரா

அத்துய ரதுகொடு சுப்பிரமணி படும் அப்புன மதனிடை---- இபமாகி

அக்குற மகளுட னச்சிறு முருகனை அக்கண மணமருள்---- பெருமாளே.

## பிரபோ கணபதே பரி பூரண வாழ்வருள்வாயே

பிரபோ கணபதே பரி பூரண வாழ்வருள்வாயே,
பிரபோ கணபதே பரி பூரண வாழ்வருள்வாயே

சார்ந்து வணங்கி துதி பாடி ஆடி உந்தன்,
சன்னதி சரண் அடைந்தோமே

சாந்த சித்த சௌபாக்கியம் யாவையும்,
தந்தருள் சத்குரு நீயே

பிரபோ கணபதே பரி பூரண வாழ்வருள்வாயே,
பிரபோ கணபதே பரி பூரண வாழ்வருள்வாயே

ஆதி மூல கணநாத கஜானன, அற்புத தவள ஸ்வரூபா,
தேவ தேவ ஜெய விஜய விநாயக சின்மய பரசிவ தீபா

பிரபோ கணபதே பரி பூரண வாழ்வருள்வாயே,
பிரபோ கணபதே பரி பூரண வாழ்வருள்வாயே

தேடி தேடி எங்கோ ஓடுகின்றார் உன்னை,
தேடிக் கண்டு கொள்ளலாமே

கோடி கோடி மதயானைகள் பணிசெய்ய
குன்றென விளங்கும் பெம்மானே

பிரபோ கணபதே பரி பூரண வாழ்வருள்வாயே
பிரபோ கணபதே பரி பூரண வாழ்வருள்வாயே
பிரபோ கணபதே பரி பூரண வாழ்வருள்வாயே

## கௌரி நந்தன கஜானனா

கௌரி நந்தன கஜானனா, கிரிஜா நந்தன நிரஞ்சனா
பார்வதி நந்தன சுபானனா.
பாஹி பிரபோமா பாஹி பிரசன்னா, ஹே கௌரிநந்தன கஜானனா
கிரிஜா நந்தன நிரஞ்சனா, பார்வதி நந்தன சுபானனா
பாஹி பிரபோமா பாஹி பிரசன்னா!

## அன்பருக்கு அன்பனே நீ வா வா ஷண்முகா

அன்பருக்கு அன்பனே நீ வா வா ஷண்முகா,
ஆறுபடை வீடுடையாய் வாவா ஷண்முகா

இன்பமய ஜோதியே நீ வா வா ஷண்முகா,
ஈசன் உமை பாலகனே வா வா ஷண்முகா

உறஹ நாபன் மருஹனே நீ வா வா ஷண்முகா,
ஊமைக்கருள் புரிந்தவனே வா வா ஷண்முகா

எட்டுக்குடி வேலவனே வா வா ஷண்முகா,
ஏறுமயில் ஏறியே நீ வா வா ஷண்முகா

ஐங்கரனுக் இளையவனே வா வா ஷண்முகா,
ஆறுமுக வேலவா நீ வா வா ஷண்முகா

ஒய்யாரி வள்ளிலோலா வா வா ஷண்முகா,
ஓம்கார தத்துவமே வா வா ஷண்முகா

ஔவைக் குபதேசித்தவா வா வா ஷண்முகா
அகிலலோக நாயகனே வா வா ஷண்முகா

ஆடி வாநீ ஆடி வாநீ வா வா ஷண்முகா
ஓடி வாநீ ஓடி வாநீ வா வா ஷண்முகா

## ஆடுக ஊஞ்சல் ஆடுகவே

ஆடுக ஊஞ்சல் ஆடுகவே, அய்யா முருகா ஆடுகவே,
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே, அய்யா முருகா ஆடுகவே!

ஆழிப்படுக்கை கொண்டோனின், அருமை மருகா ஆடுகவே
ஊழி தாண்டி நிற்பானின், உத்தமச் செல்வா ஆடுகவே!

வாழும் மனிதர் யாவருக்கும், வழிக்குத் துணையாம் வேலவனே
ஆளுங் கவலை ஓடிடவே, ஆடுக ஊஞ்சல் ஆடுகவே!

ஆடகப் பொன்னால் ஊஞ்சலிட்டு, அதற்கு வயிரக் கயிருமிட்டு
கூடிடும் அடியார் ஆட்டிடவே, குமரா ஊஞ்சல் ஆடுகவே!

பாடுகள் குறைந்தே மாந்தரெல்லாம், பண்பால் உயர்ந்தே வாழ்ந்திடவே
வாடிடும் பயிர்கள் வளம்பெறவே, ஆடுக ஊஞ்சல் ஆடுகவே!

முன்னே பின்னே சென்றாலும், முளையில் ஒன்றி நின்றுடுமே
என்னே வாழ்க்கை என்றாலும், எல்லாம் உன்னை சுற்றியதே!

குன்றாக் குடியாய் எமைஆக்கும், குன்றக் குடியின் வடிவேலா
கண்ணே மணியே கதிர்வேலா, கவினார் ஊஞ்சல் ஆடுகவே!

விண்ணவர் செல்வி தெய்வானை, வேடவர் மகளாம் வள்ளியுடன்
மண்ணகம் சுற்றும் மயிலேறி, மேதகு சேவற் கொடியாட

கொண்டிடும் காதல் உணர்வோடு, கனிந்த நெஞ்சத் தூஞ்சலிலே
அன்புடன் ஏறி இனிதமர்ந்தே, ஆடுக ஊஞ்சல் ஆடுகவே!

மண்ணைப் பிளந்து பெரும்பேட்டில், மாபெரும் அருளுடை வடிவுடனே
பெண்ணின் நல்லார் இருவருடன், பெருமயில் ஏறி வந்தவனே!

கண்ணே தெரியாக் காட்டிடையே, கலங்கி தவிக்கும் எங்களுக்கே
உன்னால் வழியும் தெரிந்துயர, ஆடுக ஊஞ்சல் ஆடுகவே

ஆறடி நெடிதாம் உருவுடனே, அடியார் பக்தி உருவேற்ற
பேரருள் கொண்டாய் பெரும்பேடா, பிள்ளை நலிவினைப் போக்கிடவே

சீரடி வணங்கிட வந்துள்ளோம், செல்வா அருளினைத் தந்திடுக
ஆரிருள் விலகி ஒளிபெறவே, ஆடுக ஊஞ்சல் ஆடுகவே

ஆடுக ஊஞ்சல் ஆடுகவே, அய்யா முருகா ஆடுகவே,
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே, அய்யா முருகா ஆடுகவே!

## வள்ளலார் பாட்டு

நீர்உண்டு பொழிகின்ற கார்உன்டு விளைகின்ற
நிலன்உண்டு பலனும்உண்டு
நிதிஉண்டு துதிஉண்டு மதிஉண்டு கதிகொண்ட
நெறிஉண்டு நிலையும் உண்டு
ஊர்உண்டு பேர்உண்டு மணிஉண்டு பணிஉண்டு
உடைஉண்டு கொடையும்உண்டு
உண்டுண்டு மகிழவே உணவுண்டு சாந்தம்உறும்
உளம்உண்டு வளமும்உண்டு
தேர்உண்டு கரிஉண்டு பரிஉண்டு மற்றுள்ள
செல்வங்கள் யாவும்உண்டு
தேன்உண்டு வண்டுறு கடம்பணியும் நின்பதத்
தியானமுண் டாயில்அரசே
தார்உண்ட சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தன்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே

## முத்தைத்தரு

முத்தைத்தரு பத்தித் திருநகை அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர-------- எனவோதும்

முக்கட்பர மற்குச் சுருதியின் முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும்------ அடிபேணப்

பத்துத்தலை தத்தக் கணைதொடு ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில்------- இரவாகப்

பத்தற்கிர தத்தைக் கடவிய பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வதும்----- ஒருநாளே

தித்தித்தெய ஒத்தப் பரிபுர நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு------- கழுதாடத்

திக்குப்பரி அட்டப் பயிரவர் தொக்குதொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக----- எனவோதக்

கொத்துப்பறை கொட்டக் களமிசை குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென------ முதுகூகை

கோட்புற்றெழ நட்பற் றவுணரை வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல----- பெருமாளே.

## சுட்ட திரு நீறு எடுத்து தொட்ட கையில் வேல் எடுத்து

சுட்ட திரு நீறு எடுத்து தொட்ட கையில் வேல் எடுத்து
தோகைமயில் மேலமர்ந்த சுந்தரம்--- அந்த
கட்டழகு கொண்ட தொரு கந்தவடி வேலவனை
சாற்றுவது ஆறு எழுத்து மந்திரம்.

ஆறெழுத்து மந்திரத்தை தந்ததொரு சுந்தரத்தை,
அந்திப்பகல் சிந்தனை செய் நெஞ்சமே--- அந்த
ஆறெழுத்து மந்திரத்தை யார் எடுத்து ஓதினாலும்,
ஆறுமுகம் வந்து நிற்கும் முன்னமே.

கந்தனடியே நினைத்து சங்கத் தமிழ் மாலை கொண்டு,
வந்தனை செய்வோர்கள் மனம் மாறுமே--- பரங்
குன்று வளர் குகனோடு தங்கிவரவே நமக்கு
பொங்கி வரும் செல்வம் பதினாறுமே.

கந்தனது வேலெடுத்து காவடிகள் தோள் எடுத்து
கால்நடையாய் வந்து சேரும் கூட்டமே---- அந்த
தோள்எடுத்த காவடிகள் தோகைமயில் வாகனின்,
சேவடிகள் தேடிவரும் நாட்டமே.

சேவடிகள் தேடிவர சிந்தை எல்லாம் மக்களுக்கு,
தென்பழனி ஆண்டி தந்த சொந்தமே---- அந்த
தென்பழனி மீதமர்ந்த செந்தில் வடிவேலனுக்கு,
தேசமெல்லாம் பாடிவரும் சந்தமே.

பக்கமிரு மாதிருக்க சொக்கவெள்ளி வேலெடுத்து,
பச்சைமயில் உச்சிவரும் வேலனே------ உந்தன்
பஞ்சடியை நெஞ்சிருத்தி பால்குடத்தை தோள் எடுத்தால்,
அஞ்சி மிகக் கெஞ்சிடுவான் காலனே.

மாது குற வள்ளியுடன் வண்ணமயில் ஏறிவரும்,
நீதிபதியானவனே சண்முகம்------ அந்த
நீதியிலே நானும் ஒரு பாதியென சேர்ந்திருக்க,
சேதி சொல்ல வேணும் அய்யா சண்முகம்!

சேதி சொல்ல வேணும் அய்யா சண்முகம்!
சேதி சொல்ல வேணும் அய்யா சண்முகம்!

## பச்சைமயில்வாகனனே சிவ வர சுப்ரமணியனேவா

பச்சைமயில் வாகனனே, சிவ வர சுப்ரமணியனே வா
பச்சைமயில் வாகனனே சிவ வர சுப்ரமணியனே வா!
என் இச்சை எல்லாம் உன்மேலே வைத்து எள்அளவு பயமில்லையே-முருகா
என் இச்சை எல்லாம் உன்மேலே வைத்து எள்அளவு பயமில்லையே!
பச்சை மொழி ஆனாலும், உன்னை கொஞ்சி கொஞ்சி பாடிடுவேன்
என் சர்ச்சை எல்லாம் அறிந்ததப்பா, சாமியுள்ளானதப்பா!
தங்கத்தேரில் நீ வந்தால் உன் பக்கத்திலே நான் வருவேன்-- முருகா
தங்கத்தேரில் நீ வந்தால் உன் பக்கத்திலே நான் வருவேன்
கொஞ்சம் பஞ்சாமிர்தம் உனக்கு தந்தால், திருவாய் திறக்கணுமே!
அலைகடல் ஓரத்திலே, எங்கள் அன்பான ஷண்முகனே, நீ
அலை அலையாய் மனம் காப்பாய், அனந்த கோடி நமஸ்காரம்!
பழனி மலை தேவனே வா, தண்டாயுதபாணியே வா
அழகான உன்னைப் பார்த்தால், நல்லெதெல்லாம் தொடருதப்பா!
நல்லெதெல்லாம் தொடருதப்பா, நல்லெதெல்லாம் தொடருதப்பா

## விறல்மாரன்ஐந்து-திருச்செந்தூர்

விறல்மார னைந்து மலர்வாளி சிந்த மிகவானி விந்து----- வெயில்காய

மிதவாடை வந்து தழல்போல வொன்ற வினைமாதர் தந்தம்--- வசைகூற

குறவாணர் குன்றி லுறைபேதை கொண்ட கொடிதான துன்ப--- மயல்தீர

குளிர்மாலை யின்க ணணிமாலை தந்து குறைதீர வந்து----- குறுகாயோ

மறிமா னுகந்த இறையோன் மகிழ்ந்து வழிபாடு தந்த---- மதியாளா

மலைமாவு சிந்த அலைவேலை யஞ்ச வடிவே லெறிந்த---- அதிதீரா

அறிவா லறிந்து னிருதா ளிறைஞ்சு மடியா ரிடைஞ்சல்---- களைவோனே

அழகான செம்பொன் மயில்மே லமர்ந்து அலைவ யுகந்த---- பெருமாளே.

## வேலாட மயிலாட வேலாட மயிலாட

வேலாட மயிலாட வேலாட மயிலாட,
வினை போக்கி எமையாள வருக--- முருகா
விதிமாற்றி புது வாழ்வு தருக!

சிறியேனும் உன்பிள்ளை உன்வீட்டின் கொடிமுல்லை,
அடியேனுக்கருள் காட்சி தருக--- முருகா
அயில்வேலும் மயிலோடு வருக!

விடிகாலை ஜெபவேளை வடிவேலை தொழும் வேளை,
மடிநீக்கி மனதாள வருக---- முருகா
அயில்வேலும் மயிலோடு வருக!

வேலாட மயிலாட வேலாட மயிலாட,
வினை போக்கி எமையாள வருக--- முருகா
விதிமாற்றி புது வாழ்வு தருக!

உலகாளும் தலைவா நீ உனதாட்சி தனிமாட்சி,
தேவானை குறமாதும் கூட---- முருகா
திருக்காட்சி தரவேணும் பாட!

திருச்செந்தூர் பரங்குன்றம் தன்பழனி சோலைமலை,
திருத்தணிகை சுவாமிமலை குருவே--- முருகா
செவ்வேளே சிங்கார உருவே!

மங்காத ஒளிவீசும் மதிபோலும் முகமானாய்,
எங்கேனும் நின்போன்ற காட்சி--- முருகா
இனிமேலும் அமையாதே மாட்சி!

இடறேதும் வாராது எனநீயும் கூறாது,
இனிமேலும் விடமாட்டேன் உனையே---- முருகா
இனிநானும் போவதெங்கே தனியே!

வேலாட மயிலாட வேலாட மயிலாட,
வினை போக்கி எமையாள வருக--- முருகா
விதிமாற்றி புது வாழ்வு தருக!

## கொண்டாடுகொண்டாடு

ஆலோலம் பாடுகிற வள்ளியம்மை கழுத்தில்
அணியாரம் இட்ட பெருமான்; **அரோகரா**

ஆகாயம் பூமியிடை நீராவி போல்வடிவில்
ஆதார மான பெருமான்; **அரோகரா**

மேலாளர் கீழாளர் பேதங்கள் இல்லாது
மெய்யாள வந்த பெருமான்; **அரோகரா**

மின்னாகி இடியாகி மழையாகிக் காற்றாகி
விளைவாக நின்ற பெருமான்; **அரோகரா**

கோலாலம் பூரில்வளர் கோந்தண்ட பாணிஇவன்
கோவில்கொண் டாடுமனமே! **அரோகரா**

கூற்றேதும் வாராது கொடுநோயும் சேராது
குறையாத வாழ்வு மிகுமே! **அரோகரா**

'ஓ' மென்ற சிறுமுட்டை உள்வீடு அவன் வீடு
உன்வீடும் அந்த இடமே; **அரோகரா**

ஓசைக்கு மணியுண்டு பூசைக்கு மனமுண்டு
உன்வாழ்வு கந்தன் வசமே! **அரோகரா**

முதலுக்கு முன்னவன் முடிவுக்குப் பின்னவன்
முறுவலைக்கண்டுகொண்டேன் யாரும்

முடிவது நிஜமெனத் தெரிந்தது; துயர்களை
முடித்திடத் துணிவுகொன்டேன்! **அரோகரா**

## "தேவி கருமாரியம்மன் ஸ்தோத்திரம்"

கற்பூர நாயகியே கனகவல்லி
காளி மகமாயி கருமாரியம்மா
பொற்கோவில் கொண்ட சிவகாமியம்மா
பூவிருந்தவல்லி தெய்வயானை அம்மா
விற்கோல வேதவல்லி விசாலாக்ஷி
விழிக்கோல மாமதுரை மீனாக்ஷி
சொற்கோவில் நான் அமைத்தேன் இங்கு தாயே
சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே.

புவனமுழுதாளுகின்ற புவனேச்வரி
புரமெரிந்தோன் புறமிருக்கும் பரமேச்வரி
நவநவமாய் வடிவாகும் மகேச்வரி
நம்பினவர் கைவிளக்கே சர்வேச்வரி
கவலைகளைத் தீர்த்துவிடும் காளீச்வரி
காரிருளின் தீச்சுடரே ஜோதீச்வரி
உவமானப் பரம்பொருளே ஜகதீச்வரி
உன்னடிமைச் சிறியேனை நீ ஆதரி

உன்னிடத்தில் சொல்லாமல் வேறு எந்த
உறவிடத்தில் முறையிடுவேன் தாயே எந்தன்
அன்னையவள் நீயிருக்க உலகில் மற்ற
அன்னியரைக் கெஞ்சிடுதல் முறையோ அம்மா
கண்ணீரைத் துடைத்துவிட ஓடிவாம்மா
காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா
சின்னவனின் குறல்கேட்டு உன்முகம் திருப்பு
சிரித்தபடி என்னைதினம் வழியனுப்பு

கண்ணிரண்டும் உன்னுருவே காணவேண்டும்
காலிரண்டும் உன்னடியே நாடவேண்டும்
பண்ணமைக்கும் நாஉனையே பாடவேண்டும்
பக்தியொடு கையுனையே கூடவேண்டும்
எண்ணமெல்லாம் உன்நினைவே ஆகவேண்டும்
இருப்பதெல்லாம் உன்நினைவே ஆகவேண்டும்
மண்ணளக்கும் சமயபுர மாரியம்மா
மகளுடைய குறைகளையும் தீருமம்மா

நெற்றியிலும் குங்குமமே நிறையவேண்டும்
நெஞ்சினிலுன் திருநாமம் வழிய வேண்டும்
கற்றதெல்லாம் மென்மேலும் பெருக வேண்டும்
கவிதையிலே உன்நாமம் வாழவேண்டும்
சுற்றமெல்லாம் நீடூழி வாழவேண்டும்
ஜோதியிலே நீயிருந்து ஆளவேண்டும்
மற்றதெல்லாம் நானுனக்குச் சொல்லலாமா?
மடிமீது பிள்ளை என்னைத் தள்ளலாமா?

அன்னைக்கு உபசாரம் செய்வதுண்டோ?
அருள்செய்ய இந்நேரம் ஆவதுண்டோ?
கண்ணுக்கு இமையன்றி காவலுண்டோ?
கன்றுக்குப் பசுவன்றிச் சொந்தமுண்டோ?
முன்னைக்கும் பின்னைக்கும் பார்ப்பதுண்டோ?
முழுமைக்கும் நீ எந்தன் அன்னையன்றோ?
எண்ணைக்கும் விளக்குக்கும்பேதமுண்டோ?
என்றைக்கும் நானுந்தன் பிள்ளையன்றோ?

அன்புக்கே நானடிமை ஆகவேண்டும்
அறிவுக்கே என்காது கேட்கவேண்டும்
வம்புக்கே போகாமல் இருக்கவேண்டும்
வஞ்சத்தை என்னெஞ்சம் அறுக்கவேண்டும்
பண்புக்கே உயிர்வாழ ஆசை வேண்டும்
பரிவுக்கே நானென்றும் பணியவேண்டும்
என்பக்கம் இவையெல்லாம் இருக்கவேண்டும்
என்னோடு நீயென்றும் வாழவேண்டும்

கும்பிடவோ கையிரண்டு போதவில்லை
கூப்பிடவோ நாவொன்றால் முடியவில்லை
நம்பிடவோ மெய்யதனில் சக்தியில்லை
நடந்திடவோ காலிரண்டால் ஆகவில்லை
செம்பவழ வாயழகி உன்னெழிலோ
சின்ன இரு கண்களுக்குள் அடங்கவில்லை
அம்பளவு விழியாளே உன்னை என்றும்
அடிபணியும் ஆசைக்கோர் அளவுமில்லை

காற்றாகிக் கனலாகிக் கடலாகினாய்
கயிறாகி உயிராகி உடலாகினாய்
நேற்றாகி இன்றாகி நாளாகினாய்
நிலமாகிப் பயிராகி உணவாகினாய்
தோற்றாலும் ஜெயித்தாலும் வாழ்வாகினாய்
தொழுதாலும் அழுதாலும் வடிவாகினாய்
போற்றாத நாளில்லை தாயே உன்னை
பொருளோடு புகழோடு வைப்பாய் என்னை

கற்பூர நாயகியே கனகவல்லி
காளி மகமாயி கருமாரியம்மா
பொற்கோவில் கொண்ட சிவகாமியம்மா
பூவிருந்தவல்லி தெய்வயானை அம்மா
விற்கோல வேதவல்லி விசாலாக்ஷி
விழிக்கோல மாமதுரை மீனாக்ஷி
சொற்கோவில் நான் அமைத்தேன் இங்கு தாயே
சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே.

## <u>மகா லக்ஷ்மி அஷ்டகம்</u>

நமஸ்தேஸ்து மஹாமாயே,ஸ்ரீபீடே,சுரபூஜிதே,
சங்க சக்ர கதா ஹஸ்தே, மகாலக்ஷ்மி நமோஸ்துதே!
நமஸ்தே கருடாருடே,கோலாசுர பயம்கரி,
சர்வபாவ ஹரேதேவி, மகாலக்ஷ்மி நமோஸ்துதே!
சர்வக்னே சர்வவரதே, சர்வ துஷ்ட பயம்கரி,
சர்வ துக்க ஹரே தேவி, மகாலக்ஷ்மி நமோஸ்துதே!
சித்தி புத்தி ப்ரதே தேவி, பக்தி முக்தி பிரதாயினி,
மந்த்ர மூர்த்தே சதா தேவி, மகாலக்ஷ்மி நமோஸ்துதே!
அத்யந்த ரஹீதே தேவி, ஆதி சக்தி மகேஸ்வரி,
யோகஜே யோக சம்பூதே, மகாலக்ஷ்மி நமோஸ்துதே!
ஸ்தூல சூஷ்ம மஹா ரௌத்ரே, மஹா சக்தி மஹோ தரே,
மஹா பாப ஹரே தேவி, மகாலக்ஷ்மி நமோஸ்துதே!
பத்மாசன ஸ்திதே தேவி, பரப் ப்ரம்ஹ ஸ்வரூபிணி,
பரமேசி ஜகன்மாதா. மகாலக்ஷ்மி நமோஸ்துதே!
ஸ்வேதாம்பர தரே தேவி, நானாலன்கர பூஷிதே,
ஜகத் ஸ்திதே, ஜகன்மாதா, மகாலக்ஷ்மி நமோஸ்துதே!

## சரஸ்வதி

சரஸ்வதி நமஸ்துப்யம், வரதே காமரூபிணி, வித்யா ரம்பம் கரிஷ்யாமி, சித்திர் பவதுமே சதா! ஆய கலைகள் அறுபத்தினான்கினையும், ஏய உணர்விக்கும் என் அம்மை, தூய உருப்பழிங்கு போவாள் என் உள்ளத்தினுள்ளே, என்றும் இருப்பாள் வாராதிடர்! என்றும் இருப்பாள் வாராதிடர்! வாணி கலைவாணி தேவி, ஞான சுகுமாரி தேவி! வாணி கலைவாணி தேவி, ஞான சுகுமாரி தேவி!

## துக்கநிவாரணஅஷ்டகம்

மங்கள ரூபிணி மதியணி சூலினி மன்மத பாணியளே
சங்கடம் நீக்கிட சடுதியில் வந்திடும் சங்கரி சௌந்தரியே
கங்கன பாணியன் கனிமுகம் கண்ட நல் கற்பக காமினியே
ஜெய ஜெய சங்கரி கௌரி கிருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி!
கானுறு மலரென கதிரொளி காட்டி காத்திட வந்திடுவாள்
தானுறு தவஒலி தாரொலி மதிஒலி தாங்கியே வீசிடுவாள்
மானுறு விழியாள் மாதவர் மொழியாள் மாலைகள் சூடிடுவாள்
ஜெய ஜெய சங்கரி கௌரி கிருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி!
சங்கரி சௌந்தரி சதுர்முகன் போற்றிட சபையினில் வந்தவளே
பொங்கரி மாவினில் பொன் அடி வைத்து பொரிந்திட வந்தவளே
என் குலம் தழைத்திட எழில் வடிவுடனே எழுந்தனள் துர்க்கயளே
ஜெய ஜெய சங்கரி கௌரி கிருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி!
தனதன தன் தன தவில் ஒலி முழங்கிட தன்மணிநீ வருவாய்
கங்கன கங் கண கதிரொளி வீசிட கண்மணி நீ வருவாய்
பண்பன பம் பண பரைஒலி கூவிட பண்மணி நீ வருவாய்
ஜெய ஜெய சங்கரி கௌரி கிருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி!
பஞ்சமி பைரவி பர்வத புத்ரி பஞ்சனல் பாணியளே
கொஞ்சிடும் குமரனை குணமிகு வேலனை கொடுத்த நள் குமரியளே
சங்கடம் தீர்த்திட சமரது செய்த நல் சக்தி எனும் மாயே
ஜெய ஜெய சங்கரி கௌரி கிருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி!
எண்ணியபடி நீ அருளிட வருவாய் என் குல தேவியளே
பண்ணிய செயலின் பலன் அது நலமாய் பல்கிட அருளிடுவாய்
கன்ணொளி அதனால் கருணையை காட்டி கவலைகள் தீர்ப்பவளே
ஜெய ஜெய சங்கரி கௌரி கிருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி!
இடர்தரும் தொல்லை இனிமேல் இல்லை என்று நீ சொல்லிடுவாய்
சுடர்தரும் அமுதே சுருதிகள் கூறி சுகம் அது தந்திடுவாய்
படர்தரும் இருளில் பரிதியாய் வந்து பழவினை ஓட்டிடுவாய்
ஜெய ஜெய சங்கரி கௌரி கிருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி!
ஜெய ஜெய பாலா சாமுண்டேஸ்வரி ஜெய ஜெய ஸ்ரீதேவி
ஜெய ஜெய துர்கா ஸ்ரீபரமேஸ்வரி ஜெய ஜெய ஸ்ரீதேவி
ஜெய ஜெய ஜெயந்தி மங்களகாளி ஜெய ஜெய ஸ்ரீதேவி
ஜெய ஜெய சங்கரி கௌரி கிருபாகரி துக்க நிவாரணி காமாக்ஷி

## கங்க ஜடாதர கௌரிசங்கர

கங்க ஜடாதர கௌரிசங்கர கிரிஜா மன ரமணா
ம்ரித்துன்ஜய மஹதேவ மகேஸ்வர மங்கள சுப சரணா
நந்தி வாஹனா நாக பூஷணா, நந்தி வாஹனா நாக பூஷணா
நிருபம குண சதனா
நடன மனோஹர நீலகண்ட சுவாமி, நடன மனோஹர நீலகண்ட சுவாமி
நீரஜ தள நயனா,சுவாமி நீரஜ தள நயனா!
கங்க ஜடாதர கௌரிசங்கர கிரிஜா மன ரமனா
ம்ரித்துன்ஜய மஹதேவ மகேஸ்வர மங்கள சுப சரணா
நந்தி வாஹனா நாக பூஷணா, நந்தி வாஹனா நாக பூஷணா
நிருபம குண சதனா
நடன மனோஹர நீலகண்ட சுவாமி, நடன மனோஹர நீலகண்ட சுவாமி
நீரஜ தள நயனா,சுவாமி நீரஜ தள நயனா!
கங்க ஜடாதர கௌரிசங்கர கிரிஜா மன ரமணா

## லிங்காஷ்டகம்

பிரம்ம முராரி சுரார்ச்சித லிங்கம், நிர்மல பாசித சோபித லிங்கம்
ஜன்மஜ துக்க வினாசக லிங்கம், தத் ப்ரணமாமி சதாசிவ லிங்கம்!
தேவ முராரி ப்ரவர்ச்சித லிங்கம், காமத ஹன கரணாகர லிங்கம்
ராவண தர்ப வினாஷன லிங்கம், தத் ப்ரணமாமி சதாசிவ லிங்கம்!
சர்வ சுகந்தி சுலேபித லிங்கம், புத்தி விவர்த்தன காரண லிங்கம்,
சித்த சுராசுர வந்தித லிங்கம், தத் ப்ரணமாமி சதாசிவ லிங்கம்!
கனக மகாமணி பூஷித லிங்கம், பனிபதி வேஷ்டித ஷோபித லிங்கம்,
தக்ஸ சுயக்ன விநாசன லிங்கம், தத் ப்ரணமாமி சதாசிவ லிங்கம்!
குங்கும சந்தன லேபித லிங்கம், பங்கஜ ஹார சுஷோபிட லிங்கம்
சஞ்சித பாப விநாசன லிங்கம், தத் ப்ரணமாமி சதாசிவ லிங்கம்!
தேவ கணார்ச்சித சேவித லிங்கம், பாவைர் பக்தி பிரவேச லிங்கம்,
தினகர கோடி பிரபாகர லிங்கம், தத் ப்ரணமாமி சதாசிவ லிங்கம்!
அஷ்ட தளோபரி வேஷ்டித லிங்கம், சர்வ சமுத்பவ காரண லிங்கம்,
அஷ்ட தரித்ர விநாசன லிங்கம், தத் ப்ரணமாமி சதாசிவ லிங்கம்!
சுரகுரு சுரவர பூஜித லிங்கம், சுரவன புஷ்ப சடாற்சித லிங்கம்,
பராத்பரம் பராத்மக லிங்கம், தத் ப்ரணமாமி சதாசிவ லிங்கம்!
லிங்காஷ்டகம் இதம் புண்யம், படேத் சிவ சந்நிதோவ்,
சிவலோகம் அவனோப்தி சிவே ந சஹமொததே!

## சம்போ மகாதேவ சதாசிவா

சம்போ மகாதேவா சதாசிவா, அம்புஜ நயனா நாராயணா,
ஹர ஓம் ஹர ஓம் சதாசிவா, ஹரி ஓம் ஹரி ஓம் நாராயணா!
பன்னக பூஷண சதாசிவா, பன்னக சயனா நாராயணா,
ஹர ஓம் ஹர ஓம் சதாசிவா, ஹரி ஓம் ஹரி ஓம் நாராயணா!
கைலாச வாசா சதாசிவா, வைகுண்ட வாசா நாராயணா,
ஹர ஓம் ஹர ஓம் சதாசிவா, ஹரி ஓம் ஹரி ஓம் நாராயணா!
கௌரி சமேதா சதாசிவா, லஷ்மி சமேதா நாராயணா,
ஹர ஓம் ஹர ஓம் சதாசிவா, ஹரி ஓம் ஹரி ஓம் நாராயணா!
பார்வதி ரமணா சதாசிவா, பாப விமோச்சன நாராயணா,
ஹர ஓம் ஹர ஓம் சதாசிவா, ஹரி ஓம் ஹரி ஓம் நாராயணா!
அனாத ரக் ஷக சதாசிவா, ஆபத் பாண்டவ நாராயனணா,
ஹர ஓம் ஹர ஓம் சதாசிவா, ஹரி ஓம் ஹரி ஓம் நாராயணா!
சின்மயனந்தா சதாசிவா , சின்மய ரூபா நாராயணா,
ஹர ஓம் ஹர ஓம் சதாசிவா, ஹரி ஓம் ஹரி ஓம் நாராயணா!
ஹர ஓம் ஹர ஓம் சதாசிவா, ஹரி ஓம் ஹரி ஓம் நாராயணா!
ஹர ஓம் ஹர ஓம் சதாசிவா, ஹரி ஓம் ஹரி ஓம் நாராயணா!

## ஸ்ரீநிவாசா கோவிந்தா

ஸ்ரீநிவாசா கோவிந்தா, ஸ்ரீ வேங்கடேசா கோவிந்தா,
கோவிந்தா ஜெய கோவிந்தா, கோவிந்தா ஜெய கோவிந்தா!
பக்தவத்சல கோவிந்தா, பகவதப்ரிய கோவிந்தா,
கோவிந்தா ஜெய கோவிந்தா, கோவிந்தா ஜெய கோவிந்தா!
நித்ய நிர்மல கோவிந்தா, நீலமேக ஷ்யாமள கோவிந்தா,
புராண புருஷா கோவிந்தா, பண்டரிகாக்ஷா கோவிந்தா,
கோவிந்தா ஜெய கோவிந்தா, கோவிந்தா ஜெய கோவிந்தா!
நந்த முகுந்தா கோவிந்தா, நவநித சோரா கோவிந்தா,
வேணுகோபாலா கோவிந்தா, வேங்கட விட்டலா கோவிந்தா,
கோவிந்தா ஜெய கோவிந்தா, கோவிந்தா ஜெய கோவிந்தா!
அனாத ரக்ஷித கோவிந்தா, ஆபத்பாந்தவ கோவிந்தா,
கோவிந்தா ஹரி கோவிந்தா கோகுல நந்தன கோவிந்தா,
கோவிந்தா ஜெய கோவிந்தா, கோவிந்தா ஜெய கோவிந்தா!
கோவிந்தா ஜெய கோவிந்தா, கோவிந்தா ஜெய கோவிந்தா!
கோவிந்தா ஜெய கோவிந்தா, கோவிந்தா ஜெய கோவிந்தா!

## ராம ராம ராம நாம தாரகம்

ராம ராம ராம ராம ராமநாம தாரகம்,
ராமகிருஷ்ண வாசுதேவ பக்தி முக்தி தாயகம்
ஜானகி மனோஹரம் சர்வலோக நாயகம்,
சங்கராதி சேவ்யமான திவ்யநாம வைபவம்!
ராம ராம ராம ராம ராமநாம தாரகம்,
ராம ராம ராம ராம ராம ராம ராம்,
ராம ராம ராம ராம ராம ராம ராம்,
ராம ராம ராம ராம ராம ராம ராம்,
ராம ராம ராம ராம ராம ராம ராம்,
ராம ராம ராம ராம ராம ராம ராம்!

## ஹரிவராசனம்விஸ்வமோகனம்

ஹரிவராசனம் விஸ்வமோகனம், ஹரிததீஸ்வரம் ஆராத்யபாதுகம்,
அரிவிமர்த்தனம் நித்யநர்த்தனம் ஹரிஹராத்மஜம் தேவமாஸ்ரயே,
சரணம் ஐயப்பா, சுவாமி சரணம் ஐயப்பா,
சரணம் ஐயப்பா, சுவாமி சரணம் ஐயப்பா
சரணகீர்த்தனம் பக்தமானசம், பரண லோலுபம் நர்த்தனாலசம்,
அருணபாசுரம் பூதநாயகம், ஹரிஹராத்மஜம் தேவமாஸ்ரயே,
சரணம் ஐயப்பா, சுவாமி சரணம் ஐயப்பா,
சரணம் ஐயப்பா, சுவாமி சரணம் ஐயப்பா!
பிரணசத்யகம் ப்ராணநாயகம், ப்ரணதகல்பகம் சுப்ரபாஞ்சிதம்,
பிரணவமந்திரம் கீர்த்தனப்ரியம், ஹரிஹராத்மஜம் தேவமாஸ்ரயே,
சரணம் ஐயப்பா, சுவாமி சரணம் ஐயப்பா
சரணம் ஐயப்பா, சுவாமி சரணம் ஐயப்பா
துரஹவாகனம் சுந்தரானனம், வரகதாயுதம் வேதவர்நிதம்
குருக்ருபாகரம் கீர்த்தனப்ரியம், ஹரிஹராத்மஜம் தேவமாஸ்ரயே,
சரணம் ஐயப்பா, சுவாமி சரணம் ஐயப்பா,
சரணம் ஐயப்பா, சுவாமி சரணம் ஐயப்பா!
திரிபுவனார்ச்சிதம் தேவதாத்மகம், த்ரிநயனம் ப்ரபும் திவ்யதேசிகம்,
த்ரிதஷ பூஜிதம் சிந்திதப்ரதம், ஹரிஹராத்மஜம் தேவமாஸ்ரயே,
சரணம் ஐயப்பா, சுவாமி சரணம் ஐயப்பா,
சரணம் ஐயப்பா, சுவாமி சரணம் ஐயப்பா!
பவபயாபஹம் பாவுகாவகம், புவனமோஹனம் பூதிபூஷணம்,
தவளவாஹனம் திவ்யவாரணம், ஹரிஹராத்மஜம் தேவமஸ்ரயே,
சரணம் ஐயப்பா, சுவாமி சரணம் ஐயப்பா,
சரணம் ஐயப்பா, சுவாமி சரணம் ஐயப்பா!

களம்ருதுஸ்மிதம் சுந்தரானனம், களபகோமளம் காத்ரமோஹனம்,
களபகேசரி வாஜிவாஹனம், ஹரிஹராத்மஜம் தேவமாஸ்ரயே,
சரணம் ஐயப்பா, சுவாமி சரணம் ஐயப்பா,
சரணம் ஐயப்பா, சுவாமி சரணம் ஐயப்பா!
ஸ்ரிதஜனபிரியம் சிந்திதப்ரதம், ஸ்ருதிவிபூஷணம் சாதுஜீவனம்,
ஸ்ருதிமநோஹரம் கீதலாலசம், ஹரிஹராத்மஜம் தேவமாஸ்ரயே,
சரணம் ஐயப்பா, சுவாமி சரணம் ஐயப்பா,
சரணம் ஐயப்பா, சுவாமி சரணம் ஐயப்பா!
சரணம் ஐயப்பா, சுவாமி சரணம் ஐயப்பா
சரணம் ஐயப்பா, சுவாமி சரணம் ஐயப்பா!
சுவாமி சரணம் ஐயப்பா,சுவாமி சரணம் ஐயப்பா,சுவாமி சரணம் ஐயப்பா!

பஞ்சாத்ரீஸ்வரி மங்களம்! ஹரிஹரப் ப்ரேமாக்ரிதே மங்களம்!
பிஞ்சாலங்க்ரித மங்களம்! ப்ரணமதாம் சிந்தாமனே மங்களம்!
பஞ்சாஸ்யத்வஜ மங்களம்! த்ருஜகதமாத்யப்ரபோ மங்களம்!
பஞ்சாஸ்த்ரோபம மங்களம்! ஸ்ருதி ஷிரோலன்கார சன் மங்களம்!
ஓம்! ஓம்! ஓம்!

## ஆஞ்சநேய ரகுவீரா

ஆஞ்சநேய வீரா, ஹனுமந்த சூரா வாயுகுமாரா வானர வீரா
ஆஞ்சநேய வீரா, ஹனுமந்த சூரா வாயுகுமாரா வானர வீரா
ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெய ராம் சீதா ராம் ஜெய ராதேஷ்யாம்
ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெய ராம் சீதா ராம் ஜெய ராதேஷ்யாம்
ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெய ராம் சீதா ராம் ஜெய ராதேஷ்யாம்
ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெய ராம் சீதா ராம் ஜெய ராதேஷ்யாம்
ஆஞ்சநேய வீரா, ஹனுமந்த சூரா

## கல்லாப் பிழையும்

கல்லாப் பிழையும், கருதாப் பிழையும் , கசிந்துருகி
நில்லாப் பிழையும், நினையாப்பிழையும், நின்னை ஐந்தெழுத்தை,
சொல்லாப்பிழையும், துதியாப்பிழையும், தோழாப்பிழையும்,
எல்லாப்பிழையும், பொறுத்தருள்வாய் கச்சி ஏகம்பனே!

## சைவ நீதிமுறை

வான் முகில் வழாது பெய்க, மலி வளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க, குறைவிலா துயிர்கள் வாழ
நான் மறை அறங்கள் ஓத, நற்றவம் வேள்வி மல்க,
மேன்மை கொள் சைவ நீதி, விளங்குக உலகம் எல்லாம்!

## நவக்ரஹ பாடல்கள்

**சூரியன்:**
சீலமாய் வாழச் சீரருள்புரியும், ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுதந்திரா போற்றி, வீரியா போற்றி வினைகள் கலைவாய்!

**சந்திரன்:**
எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும், திங்களே போற்றி திருவருள் போற்றி
சந்திரா போற்றி, சத்குரு போற்றி, சங்கடம் தீர்ப்பாய் சதுரா போற்றி

**செவ்வாய்:**
சிறப்புறு மணியே செவ்வாய் தேவே, குறைவிலா தருள்வாய் குணமுடன் வாழ
மங்களச் செவ்வாய் மலரடி போற்றி, அங்காரகனே அவதிகள் நீக்கு!

**புதன்:**
இதமுற வாழ இன்னல்கள் நீக்கு, புத பகவானே பொன்னடி போற்றி
பதங் தந்தாள்வாய் பண்ணொலியானே, உதவியே அருளும் உத்தமா போற்றி

**குரு:**
குணமிகு வியாழக் குரு பகவானே, மணமுள வாழ்வு மகிழ்வுடன் அருள்வாய்
ப்ரகஸ்பதி வியாழப்பர குருநேசா, க்ரஹ தோஷமின்றிக் கடாக்ஷித் தருவாய்!

**சுக்கிரன்:**
சுக்கிர மூர்த்தி சுபசுகம் ஈவாய், வக்கிரமின்றி வரமிகத் தருள்வாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே, அள்ளிக்கொடுப்பாய் அடியார்க்கருளே!

**சனீஸ்வரன்:**
சங்கடம் தீர்ப்பாய் சனி பகவானே, மங்களம் பொங்க மனம் வைத்தருள்வாய்
சச்சரவின்றி சாகா நெறியில், இச்சகம் வாழ இன்னருள் தாதா!

**ராகு:**
அரவெனும் ராகு ஐயனே போற்றி, கரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி, ராகு கனியோ ரம்யா போற்றி!

**கேது:**
கேதுத்தேவே கீர்த்தித் திருவே, பாதம் போற்றி பாவம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குகள் இன்றி, கேதுத்தேவே கேண்மையாய் ரக்ஷி!

## ஓம் மங்களம் ஓம்கார மங்களம்

**ஓம்** மங்களம் ஓம் கார மங்களம், ஓம் நமசிவாய குருவே மங்களம்
**ந** மங்களம் நகார மங்களம், நாத பிந்து கலாதித குருவே மங்களம்
மங்களம், ஓம் மங்களம் ஓம்கார மங்களம், ஓம் நமசிவாய குருவே மங்களம்
ம மங்களம் மகார மங்களம் , மந்தஹாச பக்தஹாச குருவே மங்களம்
மங்களம், ஓம் மங்களம் ஓம்கார மங்களம், ஓம் நமசிவாய குருவே மங்களம்
சி மங்களம் சிகார மங்களம், சித்தி புத்தி ரூப நாத குருவே மங்களம்
மங்களம், ஓம் மங்களம் ஓம்கார மங்களம், ஓம் நமசிவாய குருவே மங்களம்
வா மங்களம் வகார மங்களம், வாத பேத ரூபநாத குருவே மங்களம்
மங்களம், ஓம் மங்களம் ஓம்கார மங்களம், ஓம் நமசிவாய குருவே மங்களம்
யா மங்களம் யகார மங்களம், யெல்லா ரூப நினதே குருவே மங்களம்
மங்களம், ஓம் மங்களம் ஓம்கார மங்களம், ஓம் நமசிவாய குருவே மங்களம்
ஓம் மங்களம் ஓம்கார மங்களம், ஓம் நமசிவாய சத்குருவே மங்களம்
ஓம் மங்களம் ஓம்கார மங்களம், ஓம் நமசிவாய சத்குருவே மங்களம்
ஓம் மங்களம் ஓம்கார மங்களம், ஓம் நமசிவாய சத்குருவே மங்களம்

## உ
## நாத விந்து- பழநி

நாத விந்துக லாதீ நமோநம வேத மந்த்ரசொ ரூபா நமோநம
ஞான பண்டித ஸாமீ நமோநம----- வெகுகோடி
நாம சம்புகு மாரா நமோநம போக அந்தரி பாலா நமோநம
நாக பந்தம யூரா நமோநம------ பரசூரர்
சேத தண்டவி நோதா நமோநம கீத கிண்கிணி பாதா நமோநம
தீர சம்ப்ரம வீரா நமோநம ------- கிரிராஜ
தீப மங்கள ஜோதீ நமோநம தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோநம------ அருள்தாராய்
ஈத லும்பல கோலால பூஜையும் ஓத லுங்குண ஆசார நீதியும்
ஈர முங்குரு சீர்பாத சேவையு-------- மறவாத
ஏழ்த லம்புகழ் காவேரி யால்விளை சோழ மண்டல மீதே மநோகர
ராஜ கம்பீர நாடாளு நாயக------ வயலூரா
ஆத ரம்பயி லாரூரர் தோழமை சேர்தல் கொண்டவ ரோடே முனாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகயி------ லையிலேகி
ஆதி அந்தவு லாவாசு பாடிய சேரர் கொங்குவை காவூர் நனாடதில்
ஆவி னன்குடி வாழ்வான தேவர்கள்----- பெருமாளே.